# ஈழத்துப் புலம்பெயர் தமிழிலக்கிய ஆய்வு முயற்சிகள்: ஒரு விமர்சன நோக்கு

முருகையா சதீஸ்

*தமிழ்த்துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்*

satheesmurukaiya@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

ஈழத்தில் நிகழ்ந்த போர்ச்சூழலுக்கு அஞ்சி ஏராளமான தமிழர்கள் 1970களை அடுத்து இந்தியாவிற்கும், ஏனைய ஐரோப்பிய, வட அமெரிக்க நாடுகளுக்கும் புலம்பெயர்ந்தனர். இவர்களில் புத்தி ஜீவிகளும், எழுத்தாளர்களும் அடங்குவர். அவர்கள் புலம்பெயர்தேசங்களில் இருந்துகொண்டு ஆக்க இலக்கியங்களைப் படைத்தனர். அவ்விலக்கியங்களே புலம்பெயர் இலக்கியங்கள் எனப்படுகின்றன. அவ்வாறான ஈழத்துப் புகலிடத் தமிழ் இலக்கியங்களை மையப்படுத்தி ஆய்வு முயற்சிகள் பல தளங்களிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாய்வுகள் பெரும்பாலும் புலம்பெயர் தமிழ்மக்களின் வாழ்வியல் அனுபவங்கள், பண்பாட்டு நடைமுறைகள், சமுதாயச்சிக்கல்கள், அரசியல் - பொருளாதார இடர்பாடுகள், தாயக நினைவுடன்கூடிய அகதிவாழ்வு, அனைத்துலக நோக்கு, புதிய சூழல்சார் வெளிப்பாடுகள், பெண்களின் விழிப்புணர்வு மற்றும் விடுதலை. புலம்பெயர் தமிழிலக்கிய வளர்ச்சிநிலை முதலிய கருப்பொருள்களைப் பிரதிபலிப்பவையாகவே காணப்படுகின்றன. இவ்வாய்வு முயற்சிகள் வேறுபட்ட காலங்களை வரையறை செய்தும், வேறுபட்ட இலக்கியப்புலத்திலும், வேறுபட்ட நோக்கு நிலையிலும், மேலோட்டமான பார்வையிலும் உதிரிக் கட்டுரைகளாகவும், விமர்சனக்குறிப்புக்களாகவும், ஆய்வுகளாகவும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பிரதேச ரீதியாக எவ்வித ஆய்வு முயற்சிகளும் பூரணத்துவமிக்க ரீதியில் மேற்கொள்ளப்படவில்லை. போருக்குப் பின்னரான ஈழத்துப் புகலிடத் தமிழிலக்கியங்களான கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை முதலியவற்றை ஒன்றிணைத்துத் துல்லியமான, விரிவான எவ்வித சிறப்பாய்வு முயற்சிகளும் இற்றைவரை வெளிவரவில்லை. எனவே ஈழத்துப் புகலிடத் தமிழிலக்கியம்சார் ஆய்வுகளில் கண்டுகொள்ளப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் முகமாகப் புதிய நோக்கிலான, விமர்சனக் கோட்பாட்டு நிலைக்கமைவான ஆய்வு முயற்சிகள், ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நோக்கில், இற்றைவரை வெளிவந்த ஈழத்துப் புலம்பெயர் தமிழிலக்கிய ஆய்வு முயற்சிகளைத் தொகுத்து, அடையாளப்படுத்தி, அவற்றினை ஆய்வுக்குட்படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வுக்கு, ஈழத்துத் புகலிடத் தமிழிலக்கிய ஆய்வு முயற்சிகளாக வெளிவந்த நூல்கள், கட்டுரைகள், ஆய்வேடுகள், சிறப்பிதழ்கள் முதலியவை முதன்மைத்தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், பிதானமாக விமர்சனமுறை மற்றும் விவரணமுறை (விளக்கமுறை ஆய்வு) முதலிய அணுகுமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள்**: *ஈழம், புலம்பெயர் தமிழிலக்கியம், ஆய்வுகள், விமர்சன நோக்கு*

**அறிமுகம்**

ஈழத்தில் இனங்களுக்கிடையேயான ஒற்றுமையானது, 1970களின் பிற்பகுதிகளில் குறிப்பிடத்தக்க அளவில் பாதிக்கப்பட்டபோது நாட்டில் அசாதாரண நிலைமை ஏற்படத்தொடங்கியது. இனக்கலவரங்களும், இன ஒடுக்குமுறைகளும் இடம்பெறலாயின. இச்சூழ்நிலையானது சுமார் 30 ஆண்டுகால உள்நாட்டு யுத்தத்திற்கு வழிவகுத்தது. இதில் பெருமளவு பாதிக்கப்பட்டவர்கள் இலங்கைத்தமிழர்களே ஆவர். முஸ்லிம்களும், பெரும்பான்மைச் சிங்களவர்களும்கூடப் பல்வேறு விதமான பாதிப்புக்களுக்கு உள்ளாகினர். இத்தகு சூழ்நிலையில் இலங்கைத் தமிழர்கள் அதிகமாக வாழும் வடக்குக் கிழக்குப் பகுதியிலிருந்து மக்கள் இடம்பெயரவும், புலம்பெயரவும் தொடங்கினர். 80களின் தொடக்கத்திலிருந்து இன்றுவரை நான்கு தசாப்த காலங்களாக இந்நிலை நீடித்து வருகிறது. ஈழத்துப் போர் அபாயங்களாலும்,

பாதுகாப்பு இன்மையாலும் ஏராளமானவர்கள் இந்தியாவிற்கும், ஏனைய ஐரோப்பிய, வட அமெரிக்க நாடுகளுக்கும் புலம்பெயர்ந்தனர். காலப்போக்கில் அவர்கள், தாம் குடியேறிய நாடுகளையே நிரந்தர வதிவிடமாகக் கொண்டனர். இவர்களில் புத்தி ஜீவிகளும், எழுத்தாளர்களும் அடங்குவர். இவர்களில் சிலர் தாம் வாழுகின்ற புலம்பெயர் நாடுகளில் பத்திரிகை, சஞ்சிகை முதலியவற்றை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டனர். அவற்றில் பலரும் தமது மனவுணர்வுகளை வெளிக்காட்டும் ஆக்க இலக்கியங்களைப் படைத்தனர். இன்றும் படைத்து வருகின்றனர். புலம்பெயர்ந்த முதல் தலைமுறையைப்போல அடுத்த தலைமுறையினர் இல்லாது போயினும், புலம்பெயர் இலக்கியங்கள் ஓரளவிற்கு வெளிவந்த வண்ணமே உள்ளன.

புலம்பெயர் தமிழ் இலக்கியம் என்பது 'சொந்த வாழ்விடத்தை விட்டுப் புலம்பெயர்ந்தவர்களால் படைக்கப்படும் இலக்கியம்' என அழைக்கப்படுகின்றது. நாட்டைவிட்டு, தேசத்தை விட்டு - இன்னொரு நாட்டிற்கு, தேசத்திற்குப் புலம்பெயர்ந்தவர்களையே இங்கு நாம் 'புலம்பெயர்ந்தோர்' எனக் கருதமுடியும். ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்துசென்ற தமிழர்கள் அந்நாடுகளில் கண்ட புதிய மனிதர், புதிய மொழி, புதிய அனுபவங்கள், புதிய பழக்கவழக்கங்கள் என அவர்களின் வாழ்வில் ஏற்பட்ட மாற்றமும், இருப்புச் சார்ந்த போராட்டமும் ஈழத்துப் புகலிடத் தமிழிலக்கியங்களைப் புதிய தளத்திற்கு இட்டுச்சென்றன. இவ்வாறு ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்து சென்ற தமிழ்ப் படைப்பாளிகளால், அந்நாடுகளில் படைப்பட்ட ஆக்க இலக்கியங்களை மையப்படுத்திய ஆய்வு முயற்சிகள் கணிசமான அளவு ஈழத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் வெளிவந்துள்ளன. அத்தகைய ஆய்வுமுயற்சிகளை விமர்சனக் கண்ணோட்டத்தில் ஆராய இவ்வாய்வு முயற்சிக்கிறது.

**ஆய்வு நோக்கம்**

இற்றைவரை வெளிவந்த ஈழத்துப் புலம்பெயர் தமிழிலக்கிய ஆய்வு முயற்சிகளைத் தொகுத்து, அடையாளப்படுத்தி, அவற்றினை ஆய்வுக்குட்படுத்துவதன்மூலம், இதுவரை மேற்கொள்ளப்படாத புதியநோக்கிலான ஆய்வுமுயற்சிகள் தோன்ற உந்துதல் அளிக்கும் பொருட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வின் கருதுகோள்**

ஈழத்துப் புலம்பெயர் தமிழிலக்கிய ஆய்வு முயற்சிகள் கணிசமான அளவில் வெளிவந்துள்ளதுடன், அவற்றின் ஆய்வுப் பொருண்மைகள் பன்முகத்தன்மை வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன. அவை ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும், பொதுவான தமிழிலக்கிய வளர்ச்சிக்கும் கணிசமான பங்களிப்பை வழங்கியுள்ளன.

**ஆய்வு முறையியல்**

ஈழத்துப் புகலிடத் தமிழிலக்கிய ஆய்வு முயற்சிகளாக வெளிவந்த நூல்கள், கட்டுரைகள், ஆய்வேடுகள், சிறப்பிதழ்கள் முதலியவை முதன்மைத்தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், இந்த ஆய்வில் பிதானமாக விமர்சனமுறை மற்றும் விவரணமுறை (விளக்கமுறை ஆய்வு) பின்பற்றப்பட்டுள்ளது.

**நூலாக வெளிவந்த ஆய்வு முயற்சிகள்**

புலம்பெயர் தமிழிலக்கிய ஆய்வுகளில், புலம்பெயர்ந்தவர்களின் வாழ்வியல் பற்றிய பாரிய பாய்ச்சலைக் காணமுடிகின்றது. புலம்பெயர்ந்த தமிழிலக்கியப் படைப்புகளைப்பற்றிய ஆய்வுகளை, ஆய்வாளர்கள் ஈழத்தில் இருந்துகொண்டும், புலம்பெயர் தேசங்களில் இருந்துகொண்டும் மேற்கொண்டு வருகின்றனர். அவர்கள் புலம்பெயர் இலக்கிய சங்கங்கள், சபைகள், கழகங்கள், தமிழ் விழாக்கள், அரங்கங்கள், மாநாடுகள் முதலியவற்றின் துணையோடு புலம்பெயர் இலக்கிய ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளனர்.
அவற்றினை விரிவாகப் பார்க்க வேண்டியது அவசியமாகும். எடுத்துக்காட்டாக, குரும்பசிட்டி இரா. கனகரத்தினம், 'அலைகடல்களுக்கு அப்பால் தமிழர்' (1973, கண்டி), 'இறியூனியன் தீவில் எங்கள் தமிழர்'

(1979, கண்டி), ‘மொறிசியஸ் தீவில் எங்கள் தமிழர்’ (1980, கண்டி) என்னும் நூல்களை எழுதியுள்ளார். அந்நூல்களில் ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்து சென்ற தமிழர்களின் வாழ்வியல் அனுபவங்களைத் தன் அனுபவப் பகிர்வுகளாகத் தந்துள்ளமையைக் காணமுடிகின்றது. அதுமட்டுமல்லாமல் சித்திரலேகா மௌனகுரு, ‘இலங்கைத் தமிழரின் புலம்பெயர் இலக்கியம்’ (1995, சுதந்திர இலக்கிய அமைப்புக்குழு, நுகேகொட) எனும் நூலை எழுதியுள்ளார். இந்நூல் இருபதாம் நூற்றாண்டுத் தமிழிலக்கியத்தின், கலாசார முனைப்புக்களில் ஒன்றாகப் புலம்பெயர் இலக்கியத்தை அடையாளப்படுத்துகின்றது. புலம்பெயர் இலக்கியத்தின் சமூக, அரசியல் பின்னணி, இலக்கிய முயற்சிகள், இலக்கியம் வெளிப்படுத்தும் உணர்வுகள், எதிர்காலம் என்ற அடிப்படையில் வரலாற்றைக் கட்டமைக்க முனைவதை இந்நூல்மூலம் இனங்காண்கின்றோம்.

சாமி அப்பாத்துரை, ‘புலம்பெயர்ந்த தமிழன்’ எனும் தலைப்பிலான நூலினைக் கனடாவில் 1995ஆம் ஆண்டு, கனடா - ஈழநாடு பதிப்பகத்தின் வெளியீடாக வெளியிட்டிருந்தார். இந்நூல் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நூலின் முற்பகுதியில் உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் அகதிகளின் நிலைமையை எடுத்துக்காட்டப்பட்டுள்ளதோடு, சிறப்பாகக் கனடாவில் வாழும் புலம்பெயர் தமிழரின் அகதி வாழ்வின் சிக்கல்கள் பேசப்பட்டுள்ளன. நூலின் இரண்டாம் பகுதியில் புலம்பெயர் தமிழரின் புதுவாழ்வு, அங்கு தமிழ்மொழியின் பிரயோகம், குடியேற்றத்திட்டங்கள், கல்வித்துறை முதலிய பல விடயங்கள் கட்டுரைகளின்மூலம் பதிவுசெய்யப்பட்டுள்ளமை சிறப்பானதாகும். மேலும், அருந்தவராஜா என்பவர், ‘புலம்பெயரும் மண்வாசம்: தாயகப் புலம்பெயர் மக்களிடையே ஒரு நோக்கு’ எனும் நூலினை 2000க்கு முற்பகுதியில், ஜெனிவா - சுவிற்சர்லாந்து கலை, இலக்கியப்பேரவையின் வெளியீடாக வெளியீடு செய்துள்ளார். (ஆண்டு குறிப்பிடப்படவில்லை) அதில் தான்கண்ட புலம்பெயர்வாழ் அனுபவங்களை, தமிழர் கண்ட நகர்வு, தாயக நினைவு, கண்ணீர் பயணம், புலம்பெயர் தமிழர் வாழ்வு, முதலிய தலைப்புக்களில் கட்டுரைகளாகப் பதிவுசெய்துள்ளமையும் சிறப்புக்குரியது எனலாம்.

வி. நித்தியானந்தத்தின் ‘புலம்பெயந்த இலங்கைத் தமிழரின் பண்பாட்டுத் தனித்துவம் : சில அவதானிப்புகள்’ (2002) எனும் நூல் முக்கியமானது. பண்பாடும் - புலம்பெயர்வும், பண்பாடும் - சமூகமும், பண்பாட்டுப் பேணல் முயற்சிகள், பண்பாடும் - தாய்ச் சமூகமும் முதலிய தலைப்புக்களில் கருத்துக்களைப் பதிவுசெய்கிறார். புலம்பெயர் தமிழர் பண்பாடு என்பதை இலங்கைத் தமிழ்ப் பண்பாட்டினதும், புகலிடப் பண்பாட்டினதும் இணைவுநிலை மாத்திரம் என்று கருதாமல் தமிழ்நாட்டுப் பண்பாட்டுடனான இணைவுநிலையாகப் பேசுகிறார். மேலும், கி. விசாகரூபனின், ‘புலம்பெயர் கவிதை: உருவம் உள்ளடக்கம் உணர்த்தும்முறை’ (2004, யாழ்ப்பாணம்) எனும் நூலும் இங்கு முக்கியமானது. இந்நூலில், புலம்பெயர்ந்தோரின் இலக்கியப் படைப்புக்கள் பற்றிப் பொதுவாகவும், புலம்பெயர்ந்தவர்களின் கவிதைத்துறையின் போக்குகள் பற்றியும் சுருக்கமாக ஆராயப்பட்டுள்ளன. புலம்பெயர்ந்தோரின் இலக்கியப்படைப்புக்கள் தமிழிலக்கியப் பரப்பில் புதியதொரு போக்கை ஏற்படுத்தியுள்ளதை இங்கு காணலாம். இலங்கைத் தமிழர்களின் புலப்பெயர்ச்சி, புலம்பெயர் கவிதைகளின் உருவம், உள்ளடக்கம், உணர்த்தும்முறை ஆகியவை சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன.

புலம்பெயர்ந்தோர் இலக்கியம் என்னும் பதப்பிரயோகத்தினை முதன்முதலில் அறிமுகப்படுத்தியவராக ஈழத்தின் மூத்த எழுத்தாளர் எஸ்.பொ காணப்படுகின்றார். 1989இல் இந்தக் காத்திரமான சொற்றொடரை ‘மெல்பன்’ நகரில் நடந்த இலக்கிய விழாவில் முன்மொழிந்தார். இந்தச் சொற்பாவனையானது தமிழிலக்கியப் பரப்பில் முன்னர் ஒருபோதும் பயிலப்படவில்லை என்பது அவதானிக்கத்தக்க விடயம் எனலாம். அதுமட்டுமன்றி, புதுவைப்பல்கலைக்கழகச் சுப்பிரமணியபாரதியார் தமிழியற்புலத்தில், ‘புலம்பெயர்ந்தோர் இலக்கியம்’ (22.03.2006) பற்றி எஸ்.பொ ஆற்றிய பேருரையானது, ‘பனிக்குள் நெருப்பு’ எனும் நூலாக 112 பக்கங்களுடன் அதே ஆண்டு வெளிவந்தது. இந்நூல் புலம்பெயர் இலக்கிய வரலாற்றை ஒரு கதைசொல்லியின் அனுபவத்தின் வாயிலாக எடுத்துரைக்கின்றது. இந்நூல் வுயஅடை னுயைளிழசய என்பதிலிருந்து தொடங்கி, உலகம் தழுவிய பார்வையாக விரிந்து, புலம்பெயர்தமிழிலக்கியத்தின் பன்முகத்தன்மையை எடுத்துரைக்கின்றது. புகலிட இலக்கியம், அதன்

மூன்று தலைமுறையினர், அனுபவங்கள், சஞ்சிகைகள், பல்கலைக்கழக ஆய்வுகள், ஆக்க இலக்கியங்கள் என்ற வகையில், எஸ்.பொவின் அனுபவத்தில் பாதித்தவற்றை மட்டும் இந்நூல் பேசுகிறது. மேலும், சிசு. நாகேந்திரனின் 'பிறந்தமண்ணும் புகலிடமும்: சில அவதானிப்புக்கள்' எனும் நூலினையும் குறிப்பிட முடியும். இந்நூலினை அவுஸ்திரேலியாவில் 2008ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய தமிழ் - இலக்கியக் கலைச்சங்கம் வெளியீடாக வெளியிட்டுள்ளார். ஈழத்தமிழரின் புலம்பெயர் வாழ்க்கையை ஒரு நேர்முக வர்ணனையாக இந்நூல் தருகிறது. ஈழத்தமிழராகப் புலம்பெயர்ந்து சென்று, இன்று ஐரோப்பிய, அமெரிக்க, கனேடிய, அவுஸ்திரேலியத் தமிழர்களோடு மாற்றம் பெற்றுவரும் புலம்பெயர்தமிழர்களின் சமூவியல் வாழ்வினை இந்நூல் வாயிலாகப் பேசுகிறார்.

ஈழத்துப் புலம்பெயர் இலக்கியங்கள் பற்றிய ஆய்வாளர்களில் முக்கியமான ஒருவராகச் சுட்டப்படக்கூடியவர் குணேஸ்வரன் ஆவார். இவர், 'அலைவும் உலைவும் - புலம்பெயர் படைப்பிலக்கியம் குறித்த பார்வைகள்' (2009) எனும் நூலினை எழுதியுள்ளார். இந்நூலில் 12 கட்டுரைகள் மூலம் புலம்பெயர்ந்தோர், புலம்பெயர்ந்த நாடுகளில் பட்ட இன்ப, துன்ப அனுபவங்களைப் படைப்பிலக்கியங்கள்மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார். புலம்பெயர் இலக்கியம், புகலிடச் சஞ்சிகைகள், மொழிபெயர்ப்புக்கள் பற்றிய கருத்துக்களும் இங்கு பதிவுசெய்யப்பட்டுள்ளன. மேலும், வெற்றிச்செல்வனின் 'ஈழத்தமிழர் புலம்பெயர் வாழ்வும் படைப்பும்' (2009) என்ற நூல் தமிழ்நாட்டில் வெளியான ஆய்வுநூல்களில் குறிப்பிடத்தக்கது. இந்நூல் புலம்பெயர் கவிதைகளைப் பெரிதும் முன்னிறுத்தி, அதன் உள்ளடக்கம் மற்றும் உருவ அமைதி முறையைப் பேசுவதாக அமைந்துள்ளது. புகலிடத் தமிழ்க் கவிதையின் வளர்ச்சிப்போக்குப் பற்றிய அறிமுகத்துடன் தொடங்கும் இந்நூலில், புகலிடக் கவிதைகளின் உள்ளடக்கம், உளவியல், அழகியல், ஒப்பீட்டியல் ஆகியவற்றைத் தனித்தனியே விளக்கியுள்ளார். அத்துடன் புகலிடத் தமிழ்ப் புதினங்கள் மற்றும் சிறுகதைகள் பற்றியும் பேசியுள்ளார். புலம்பெயர் ஈழத்தமிழர்களின் ஆக்க இலக்கியப் படைப்புக்களை வாசித்து, அவற்றின் சாரத்தை அழகியலோடு ஒப்புநோக்கித் தமிழகத்தவரால் எழுதப்பட்ட நூலாக இது காணப்படுகின்றது.

கலையரசன், 'அகதி வாழ்க்கை: ஓர் இலங்கைத் தமிழ் அகதியின் அனுபவக்குறிப்புக்கள்' என்ற நூலை, சென்னையில் 2010ஆம் ஆண்டு வெளியிட்டிருந்தார். இலங்கைத் தமிழரான கலையரசன், பல ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணம்செய்து, அங்குள்ள அரசியல், சமூக நிலவரங்களைத் தன் அனுபவக் கட்டுரைகளாகப் பதிவுசெய்துள்ளார். இந்நூலில் பயணங்கள், அகதி அரசியல், புகலிடம் தேடுதல், சத்திய சோதனை, லண்டன் உங்களை வரவேற்கிறது முதலான ஐந்து பிரிவுகளில் கட்டுரைகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. பா.ஆனந்தகுமார், 'புலம்பெயர்ந்தோர் இலக்கியம்: பனுவல்களும் மதிப்பீடுகளும்' எனும் நூலினை, 2018ஆம் ஆண்டு நியூசெஞ்சுரிபுக்ஹவுஸ் வெளியீடாகச் சென்னையில் வெளியிட்டுள்ளார். அந்நூலில் புலம்பெயர் இலக்கியம் பற்றிய பொது அறிமுகம், மற்றும் புலம்பெயர் தமிழ் இலக்கிய மதிப்பீடு என்பவை இடம்பெற்றுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

**கட்டுரையாக்க முயற்சிகள்**

ஈழத்திலிருந்தும், புலம்பெயர் தேசங்களிலிருந்தும் வெளிவரும் சஞ்சிகைகள், பத்திரிகைகள், இதழ்கள், ஆய்வுமலர்கள் முதலியவை புலம்பெயர் இலக்கிய ஆக்கம்சார் ஆய்வுக்கட்டுரைகளைப் பிரசுரிப்பதில் முக்கியம் பெறுகின்றன. அவற்றின்வழி தமது ஆய்வுசார் கட்டுரைப்பிரதிகளைக் கட்டுரையாசிரியர்கள் வெளியிட்டு வந்துள்ளனர். அவ்வாறு வெளியிடப்பட்ட புலம்பெயர் இலக்கியம் குறித்த கட்டுரையாக்க ஆய்வு முயற்சிகளை இனங்காண வேண்டியது அவசியமானதாகும். குறிப்பாக, சி. சிவசேகரத்தின் இரு கட்டுரைகள், புலம்பெயர் ஆய்வு முன்னோடி முயற்சி என்றவகையில் அவதானிப்புப் பெறுகின்றன. 'மாறுபட்ட சூழலில் சுய அடையாளத்திற்கான தேடல்' என்ற அவரின் முதலாவது கட்டுரை 13.11.1992இல் இலண்டன் தமிழோசையில் வெளிவந்தது. புலம்பெயர்ச் சூழலில் மாற்றம் பற்றிய நிச்சயமின்மை, சுய அடையாளத்திற்கான நிர்ப்பந்தம், சூழலின் பிரச்சினைகள், கலை முயற்சிகள், சுய அடையாளத் திணிப்பு முதலிய உப தலைப்புக்களினூடாகப் புலம்பெயர்வாழ் சமுதாயச் சிக்கலைப் பேசுகிறார். 'புலம்பெயர்வும்

புதிய இலக்கியமும்' என்ற அவரது இரண்டாவது கட்டுரை 18.12.1994 இல் திருச்சியில் நடைபெற்ற புலம்பெயர்ந்த தமிழர் நல மாநாட்டுச் சிறப்பு மலரில் வெளிவந்தது. இக்கட்டுரையில் இலங்கைத் தமிழர்களின் புலம்பெயர்வு, மரபு - நவீனம் என்ற இரண்டிற்கும் இடையிலான அவர்களின் வாழ்வு, மரபுசார் சிந்தனையிலிருந்து விடுபடாத்தன்மை, அகதி நிலையின் அவலம், இலக்கியப்போக்கு, படைப்பாளிகளின் கருத்துநிலை முதலியவற்றினைப் பேசியுள்ளார்.

மேலும், செ.யோகராசாவின், 'புகலிட இலக்கியங்கள்: ஒரு கண்ணோட்டம்' (முத்தமிழ் விழாமலர், யாழ்ப்பாணம், 1992), 'புலம்பெயர் கலாசாரமும் புகலிட இலக்கியங்களும்' (1995, பண்பாடு 5 : 1), 'இலங்கைப் புகலிட நாவல்கள்' (2002), 'ஈழத்துப் புகலிட இலக்கிய வளர்ச்சி: ஒரு நோக்கு' (2004) முதலிய கட்டுரைகளும் இங்கு அவதானத்திற்குரியன. அதில் 'இலங்கைப் புகலிட நாவல்கள்' எனும் தலைப்பிலான கட்டுரை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழக ஆய்விதழான 'சிந்தனை'யில் (ஜுலை, 2002) வெளிவந்தது. அதில் குழந்தைவேலின் - 'மண்ணும் மல்லிகையும்', ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் ஆறு நாவல்களும் பேசப்பட்டுள்ளன. அவரின் 'புலம்பெயர் இலக்கிய வளர்ச்சிக்கு வடமராட்சியின் பங்களிப்பு' (07.08.2011, கொழும்பு) எனும் தலைப்பில் வழங்கிய வேலாயுதம் மகா வித்தியாலய நிறுவுனர்தின நினைவுப்பேருரையும் முக்கியமானது.

புலம்பெயர் தமிழிலக்கிய வரலாற்றாக்கம்சார் கட்டுரைகளில், சித்திரலேகா மௌனகுருவின் 'ஐஅஅபைசயவெ டுவைநசயவரசந ழக ளுசை டயமெய வுயஅடைள ளழஅந சுநகடநஉவழைளெ' (1993இ ீசயஎயனய ஏழட.2 ழே.5இ ஊழடழஅடிழ)இ வ. கீதாவின் 'தொலைவும் நினைவும்' (1994), யமுனா ராஜேந்திரனின் 'இன்னொரு ஐரோப்பா - இன்னொரு லண்டன் - இன்னொரு தமிழன்', 'புலம்பெயர் இலக்கியம் கோட்பாடு பற்றிய பிரச்சினை'(1994, சுவடுகள்: இதழ் - 68, நோர்வே), செ. யோகநாதனின் 'புலம்பெயர்ந்தோர் எழுத்து முயற்சி' (1996), 'பார்த்திபனின் பதினான்கு சிறுகதைகளை முன்வைத்து புலம்பெயர் தமிழிலக்கியம் குறித்த மறுவாசிப்பு' (1997), சுரேஸ் கனகராஜாவின் 'ஈழத்துப் புலம்பெயர் தமிழ்க் கவிதையின் அடுத்தகட்ட வளர்ச்சி' (1998, இன்னுமொரு காலடி, தமிழர் நலன்புரிச்சங்கம், இலண்டன்), 'ஈழத்தமிழர் புலம்பெயர்ந்தோர் இலக்கியம் - கவிதை வடிவம் பற்றிய சிந்தனைகள்' (பண்பாடு, 1998: 19), நா. சுப்பிரமணியனின் 'புலம்பெயர் இலக்கியங்களில் ஈழத்தமிழர் சமூகம்' (யாழ்ப்பாணம் விஞ்ஞானச் சங்கக் கருத்தரங்கு, 1999), க. அருணாசலத்தின் 'புகலிடக் கவிதைகள் சில குறிப்புக்கள்' (2003), என். செல்வராஜாவின் 'புலம்பெயர்ந்த ஈழத்தமிழரின் உலகளாவிய இலக்கியத்தேடல்' (2008), ஆதவன் தீட்சண்யாவின் 'புலம்பெயர் இலக்கியம் - விவாதத்திற்கான புள்ளிகள்' (கீற்று மின்னிதழ், 20.02.2008), கொ.றொ. கொன்ஸ்ரன்ரைனின் 'புலம்பெயர்தலும் புலம்பெயர்ந்த ஈழத்தமிழரின் இலக்கிய முயற்சியும்' (காலம், இதழ் - 18), வ.ந. கிரிதரனின் 'புலம்பெயர்தலும் புலம்பெயர் இலக்கியமும் தமிழரும்' (2011), 'புகலிடத் தமிழ் நாவல் முயற்சிகள்', (2014), ந. முருகேசபாண்டியனின் 'புலம்பெயர்ந்தோர் நாவல்கள்: தமிழர் வாழ்நிலையை முன்வைத்து' (ரலசைஅஅயட.ீ.ரலசைழளயட.உழஅ) முதலியவை முக்கியமானவைகளாகக் காணப்படுகின்றன.

புலம்பெயர் வரலாற்றாக்கத்திற்கு அடிப்படையான சமூக, பண்பாடுசார் கட்டுரைகளாக, ஜெயசக்தியின் 'முதலாளித்துவச் சுரண்டலும் ஈழ அகதிகளும்' (1994), செல்வமதீந்திரனின் 'சரியும் தொழில்வாய்ப்பைச் சமன்படுத்தப் புகலிடக் கூலிகளை வெளியேற்ற முனையும் ஐரோப்பா' (1994), அ. மார்க்ஸின் 'புலம்பெயர்ந்தோர் குறித்துப் புரிந்துகொள்ளவேண்டிய உண்மைகள்' (1994), அழகு குணசீலனின் 'புகலிடத் தாய்மொழிப்போதனை: தவறுகள் - குறைபாடுகள் - முரண்பாடுகள்' (1998), மா. சின்னத்தம்பியின் 'புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்வாழ்வு - கல்வி எதிர்காலம் குறித்து', ம. இரகுநாதனின் 'புலம்பெயர்ந்தோர் புனைகதைகள் புலப்படுத்தும் பண்பாட்டுச் சிக்கல்கள்' (சிந்தனை, தொகுதி 15, இதழ் 3, 2004), உமாவின் 'புகலிடத்தில் பெண்கள் அமைப்பாதல்' (2010) வ.ந. கிரிதரனின்

'புலம்பெயர்தலும், புலம்பெயர் இலக்கியமும் தமிழரும்' (கூர்: கனடாக் கலையிலக்கிய மலர், 2011 ), ஜே.கேயின் 'புலம்பெயர் ஈழத்துப் படைப்புகளின் பங்கு' (அவுஸ்திரேலிய எழுத்தாளர் விழா, 13.05.2012), சூ.யோ. பற்றிமாகரனின் 'புலவர் சிவநாதனின் படைப்புக்களில் புலம்பெயர் இலக்கியப் பண்புகள்' (அயல்நாட்டுத் தமிழிலக்கியத்தொகுதி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2012), எழுத்தாளர் அகிலின் 'புலம்பெயர் இலக்கியம்' (கணையாழி, சித்திரை, 2013) முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

சு.குணேஸ்வரனின் 'புலம்பெயர் நாடுகளில் ஈழத்தமிழரின் அரங்கச் செயற்பாடுகள்' (தமிழோசை, 1999: 128 - 131) என்ற கட்டுரை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெள்ளிவிழாச் சிறப்பிதழில் வெளிவந்தது. இது புலம்பெயர் நாடுகளில் நிகழும் அரங்கச்செயற்பாடுகள் குறித்ததாக அமைந்துள்ளது. இவரது 'புலம்பெயர் தமிழ்ப்படைப்புலகில் பிரதேசச் செல்வாக்கு' (ஞானம், செப்டம்பர் - 2008) எனும் கட்டுரையில், கிழக்கிலங்கையைச் சேர்ந்த விமல் குழந்தைவேலின் வெள்ளாவி (2004) மற்றும் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் தில்லையாற்றங்கரை (1987) முதலிய நாவல்கள் அறிமுகஞ் செய்யப்படுவதுடன் அந்நாவல்களில் பேசப்படுகின்ற கிழக்கிலங்கை மக்களின் சமுதாயச்சிக்கல்கள் மிகச்சுருக்கமாகவும் ஆராயப்பட்டுள்ளன. (குணேஸ்வரன்.சு, 2008:180-181).

புகலிடஇலக்கியம் மற்றும் பண்பாடு தொடர்பான குணேஸ்வரனின் கட்டுரைகளில், 'புகலிட இலக்கியமும் பண்பாடும்' (கிழக்குமாகாணத் தமிழ் இலக்கியவிழா ஆய்வரங்கு, 23.10.2010) என்ற கட்டுரை முக்கியமானது. கவிதை, சிறுகதைகளை ஆதாரமாகக்கொண்டு புலம்பெயர் பண்பாட்டை நோக்கும் அதேவேளையில், புலம்பெயர் பண்பாட்டினூடாகக் கவிதை மற்றும் சிறுகதைகளையும் அக்கட்டுரை நோக்குகிறது. 'ஈழத்தமிழர் புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ்க்கல்வி' (சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு, 2012) எனும் கட்டுரை, பண்பாட்டு அரசியலின் விளைவான கல்விநிலையைப் பேசுகிறது. கல்வியியலும், பண்பாட்டியலும் இணைந்த ஆய்வு நோக்கமாக இவரது இக்கட்டுரை அமைந்துள்ளது. 'புகலிடத் தமிழ் புனைகதைகளின் வடிவம்' (லண்டன் தமிழியல் மாநாடு, 2013) எனும் இவரின் கட்டுரை, புலம்பெயர்ந்த படைப்பாளிகளான முத்துலிங்கம், ஷோபாசக்தி, செழியன், கலாமோகன், இரவி ஆகியோரின் புனைகதைகளை மையப்படுத்தி, புனைகதைகளின் வடிவங்களை இவர்கள் எவ்விதம் கையாண்டுள்ளனர் என்ற நோக்கில் ஆராய்கிறது. மேலும், சிங்கப்பூர் தமிழிலக்கியக் களமும், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனமும் இணைந்து நடாத்திய மாநாட்டுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட 'கருணாகரமூர்த்தியின் படைப்பில் வெளிப்படுகின்ற கலாசாரத் தத்தளிப்பு' (ியவாளைரமயட.உழஅஇ 2014) எனும் இவரின் கட்டுரை, புலம்பெயர் பண்பாட்டின் பிரதிபலிப்பைக் காட்டுகின்றது. குணேஸ்வரனின் புலம்பெயர் தமிழ்ச்சஞ்சிகைகள் பற்றிய ஆய்வுக்கட்டுரைகளாக, 'புலம்பெயர் சஞ்சிகைகள் - ஆய்வுக்கான ஓர் அறிமுகம்' (கலைமுகம், இதழ் - 47, 2008), 'புகலிடச் சிற்றிதழ்களின் அரசியல்' (உலகத்தமிழ் செம்மொழி மாநாடு, கோவை, 2010), 'இலத்திரனியற் சூழலில் புகலிடச் சிற்றிதழ்கள்' (சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு, கொழும்பு, 2011) முதலியவை அமைந்துள்ளன.

மேலும். எஸ். செல்வகுமாரனின் 'ஈழத்தமிழர் வாழ்வு - புலம்பெயர் சிறுகதைகளை முன்வைத்து' (இலண்டன் உலகத்தமிழியல் ஆய்வு மாநாடு, 2013) எனும் கட்டுரையும் முக்கியமானதாகும். இவரின் 'தமிழில் புலம்பெயர் இலக்கியம்' (தமிழ்மணி வார இதழ், 11.06.2017) எனும் கட்டுரையில் புலம்பெயர் இலக்கியம் பற்றிய விளக்கம் பிரதானமாகப் பேசப்படுவதுடன், புலம்பெயர் இலக்கியங்களை 80க்கு முன்னைய இலக்கியங்கள், 83க்குப் பிந்திய இலக்கியங்கள், 2001க்குப் பிந்திய இலக்கியங்கள் என மூன்று வகைப்பாட்டினுள் விளக்குவதைக் காணலாம். மேலும், த. அஜந்தகுமாரின் 'புலம்பெயர் பெண்படைப்பாளிகளின் சமூக பண்பாட்டு அடுக்குகள் மீதான வாசிப்பு' (இலண்டன் உலகத்தமிழியல் ஆய்வு மாநாடு, 2013), கே.எஸ். சுதாகரின் 'புலம்பெயர் தமிழ் இலக்கியத்தில் தமிழ்ப்படைப்பாளிகளின் நாவல்கள்' (எதுவரை மின்னிதழ், பெப்ரவரி, 2013), இரா.முருகனின் 'வரலாற்று நோக்கில் தமிழரின் புலம்பெயர்வும் படைப்பாக்க முயற்சிகளும்' (சர்வதேச தமிழ் ஆய்விதழ், காந்தி கிராமம்

பல்கலைக்கழகம், தமிழ் இலக்கிய மொழிகள் மற்றும் கிராமியக் கலைகள் புலம், 18.06.2021) முதலிய கட்டுரைகளும் அவதானிக்கத்தக்கன. இக்கட்டுரைகள் புலம்பெயர் இலக்கிய ஆக்கங்களையும், அம்மக்களின் வாழ்வியல் அம்சங்களையும் மையப்படுத்தியவையாகவே வெளிவந்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

**ஆய்வேடுகள்**

பொதுவாக இலங்கையின் எல்லாப் பல்கலைக்கழகங்களிலுமே ஈழத்துப் புலம்பெயர் இலக்கியங்கள் தொடர்பான ஆய்வு முயற்சிகள் நடைபெற்றிருக்கின்றன. குறிப்பாகச் சொல்லப்போனால், இளமாணிப் பட்டங்களைப் பொறுத்தவரையில் புலம்பெயர் படைப்பாளிகளையும், அவர்களது படைப்புக்களையும் மையப்படுத்திய ஆய்வு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். முதுதத்துவமாணிப் பட்டத்தைப் பொறுத்தவரை சு. குணேஸ்வரனின் ஆய்வு அவதானத்திற்குரியது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற இளமாணிப் பட்ட ஆய்வேடுகளில், தி. சிவஞான சீலன் எழுதிய 'வ.ஐ.ச. ஜெயபாலன் கவிதைகள் - ஓர் ஆய்வு' (1997), சு. குணேஸ்வரன் எழுதிய 'ஈழத்தமிழரது புலம்பெயர் கவிதைகள் ஓர் ஆய்வு' (1999), தி. சிவயோகினி எழுதிய 'ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் நாவல்கள் ஓர் ஆய்வு' (2000), க. கங்காதர்சினி எழுதிய 'அ. முத்துலிங்கம் சிறுகதைகள் ஓர் ஆய்வு' (2000), வ. வசந்தகுமார் எழுதிய 'புலம்பெயர் சிறுகதைகள் ஓர் ஆய்வு' (2001), ந. குகபரன் எழுதிய 'எஸ். பொ வின் நாவல்கள் ஓர் ஆய்வு' (2002) முதலியவற்றைக் குறிப்பிடலாம். கிழக்குப்பல்கலைக்கழக மொழிகள் துறைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் ஆய்வேடுகளில், 'இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் புலம்பெயர் நாவல்கள் - ஓர் ஆய்வு' (2017) என்பதும் அவதானத்திற்குரியது.

சு.குணேஸ்வரன், 'இருபதாம் நூற்றாண்டில் ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்தவர்களின் கவிதை புனைகதை பற்றிய ஆய்வு' எனும் தலைப்பில் முதுதத்துவமாணிப்பட்டத்திற்காக 2006 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப்பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புகள் பீடத்திற்கு ஆய்வினைச் சமர்ப்பித்திருந்தார். இவ்வாய்வில் 1983இல் இருந்து 2004 வரையான காலப்பகுதிகளில் வெளிவந்த ஈழத்தமிழர்களின் புலம்பெயர் படைப்புக்களில் கவிதை, புனைகதைகளை மையப்படுத்தி, அவ்விலக்கியங்களில் பேசப்பட்ட தாயக நினைவு, புலம்பெயர் வாழ்வின் அவலம், புலம்பெயர் வாழ்வின் புதிய அனுபவம் என்பவை ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

**சிறப்பிதழ்கள்**

ஈழத்திலும், புலம்பெயர் தேசத்திலும் இருந்து பல பத்திரிகைகளும், இதழ்களும், சஞ்சிகைகளும் புலம்பெயர் இலக்கியம்சார் ஆய்வுகளையும், படைப்பாக்கங்களையும் தாங்கி அவ்வப்போது வெளிவந்திருந்தாலும், அவ்விலக்கிய ஆக்கங்களை மையப்படுத்திய ஆய்வுசார் கட்டுரைகளைத் தாங்கிய சிறப்பிதழ்களாக வெளிவந்தமை மிக அரிதென்றே கூறவேண்டும். உதாரணமாக, 'ஞானம்' கலை இலக்கியச் சஞ்சிகையின் 175ஆவது வெளியீடாக 'ஈழத்துப் புலம்பெயர் இலக்கியம்' (டிசம்பர், 2014) வெளிவந்தது. அதில் பன்முக நோக்கிலான ஐம்பது கட்டுரைகள் காணப்படுகின்றன. அதில் வாழ்வியல் அனுபவங்கள், எதிர்நோக்கும் பிரச்சினைகள், மனித உணர்வுச் சிக்கல்கள் போன்றவற்றுடன் இலக்கியப் படைப்பாக்க முயற்சிகள் பற்றியும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. மேலும், 'ஜீவநதி' கலை இலக்கிய மாதச்சஞ்சிகையின் 150 ஆவது வெளியீடாக 'ஈழத்துத் நாவல் விமர்சனச் சிறப்பிதழ்' (பங்குனி, 2021) வெளிவந்தது. அதில் முதலாவதாக அமைந்துள்ள சி. ரமேஷ் அவர்களின் 'ஈழத்துத் தமிழ் நாவல்கள் அறிமுகக் குறிப்புக்கள்' எனும் கட்டுரையில் ''புலம்பெயர் ஈழத்து நாவல்கள்'' எனும் தலைப்பிலான உதிரிக்கட்டுரை காணப்படுகின்றது. அக்கட்டுரையில் 1950 கள் தொடக்கம் 2020 வரையான கால

கட்டத்தில் எழுந்த ஈழத்துப் புலம்பெயர் தமிழ் நாவல்கள் தொடர்பான தகவல்கள் பேசப்பட்டுள்ளமை சிறப்புக்குரியதாகும்.

**முடிவுரை**

ஈழத்துப் புகலிடத் தமிழ் இலக்கியங்களை மையப்படுத்திப் புலம்பெயர்மக்களின் வாழ்வியல் அனுபவங்கள், பண்பாட்டு நடைமுறைகள், சமுதாயச்சிக்கல்கள், அரசியல் - பொருளாதார இடர்பாடுகள், தாயக நினைவுடன்கூடிய அகதிவாழ்வு, அனைத்துலக நோக்கு, புதிய சூழல்சார் வெளிப்பாடுகள், பெண்களின் விழிப்புணர்வு மற்றும் விடுதலை. புலம்பெயர் இலக்கிய வளர்ச்சி நிலை முதலிய கருப்பொருள்களைப் பிரதிபலிப்பவையான ஆய்வு முயற்சிகளே அதிகம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு ஆய்வுப் பொருண்மைகள் பன்முகத்தன்மை வாய்ந்தவையாகக் காணப்படினும், அவை ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும், பொதுவான தமிழிலக்கிய வளர்ச்சிக்கும் கணிசமான பங்களிப்பை வழங்கியுள்ளன என்றே கூறவேண்டும். ஆனாலும், இலங்கைப் பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ளப்படும் தமிழியல் ஆய்வுகளில், புலம்பெயர் தமிழ் இலக்கியங்கள் பற்றிய ஆய்வு முயற்சிகள் மிகக்குறைவானதாகவே காணப்படுகின்றன. சுமார் 40 ஆண்டுகாலத்துக்குரிய புலம்பெயர் இலக்கிய வளர்ச்சி இன்னமும் சரியாக மதிப்பீடு செய்யப்படவில்லை. கலைமாணி, முதுதத்துவமாணிப் பட்டங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு சில ஆய்வுகளும், பொதுப்படையானதும், மேலெழுந்தவாரியானதுமாகக் காணப்படுகின்றன. குறிப்பாக ஈழத்துப் புலம்பெயர் தமிழ்ப்படைப்பாளிகளின் தனிப்பட்ட இலக்கியப் படைப்புக்கள் நுண்ணாய்வு செய்கின்ற முயற்சிகள் பல்கலைக்கழக மட்டத்தில் நடைபெற்ற போதும் அவை நூலுருவம் பெறாமலேயே விடப்பட்டிருக்கும் நிலையை அவதானிக்க முடிகின்றது.

ஈழத்துப் புலம்பெயர் தமிழிலக்கியங்களை மையப்படுத்திய மிகப்பரந்த அல்லது மிகக்குறுகிய அளவிலான ஆய்வு முயற்சிகள் வேறுபட்ட காலங்களை வரையறை செய்தும், வேறுபட்ட இலக்கியப்புலத்திலும், வேறுபட்ட நோக்கு நிலையிலும், மேலோட்டமான பார்வையிலும் உதிரிக் கட்டுரைகளாகவும், விமர்சனக்குறிப்புக்களாகவும், ஆய்வுகளாகவும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பிரதேச ரீதியாக எவ்வித ஆய்வு முயற்சிகளும் பூரணத்துவமிக்க ரீதியில் மேற்கொள்ளப்படவில்லை. போருக்குப் பின்னரான ஈழத்துப் புகலிடத் தமிழிலக்கியங்களான கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை முதலியவற்றை ஒன்றிணைத்துத் துல்லியமான, விரிவான எவ்வித சிறப்பாய்வு முயற்சிகளும் இற்றைவரை வெளிவரவில்லை. எனவே ஈழத்துப் புகலிடத் தமிழிலக்கியம்சார் ஆய்வுகளில் கண்டுகொள்ளப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் முகமாக புதிய நோக்கிலான, விமர்சனக் கோட்பாட்டு நிலைக்கமைவான ஆய்வு முயற்சிகள், ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை இவ்வாய்வு பரிந்துரைக்கின்றது.

**உசாத்துணைகள்**

அருந்தவராஜா,க. (ஆண்டு குறிப்பிடவில்லை). குடும்பத்துள் வாழ்தல்: தாயகப் புலம்பெயர் மக்களிடையே ஒருநோக்கு. ஜெனீவா: சுவிட்சர்லாந்து கலை இலக்கியப்பேரவை.

அருந்தவராஜா,க. (ஆண்டு குறிப்பிடவில்லை). புலம்பெயரும் மண்வாசம்: தாயக - புலம்பெயர் மக்களிடையே ஒரு நோக்கு. ஜெனீவா: சுவிட்சர்லாந்து கலை இலக்கியப்பேரவை.

ஈழத்துப் புலம்பெயர் இலக்கியம். (2014). 'ஞானம்' கலை இலக்கியச் சஞ்சிகை சிறப்பிதழ். கொழும்பு: ஞானம் பதிப்பகம்.

கலையரசன். (2010). அகதி வாழ்க்கை: ஓர் இலங்கைத் தமிழ் அகதியின் அனுபவக்குறிப்புக்கள். சென்னை: கிழக்குப் பதிப்பகம்.

குணேஸ்வரன்,சு. (2012). புனைவும் புதிதும்: ஆய்வுக்கட்டுரைகளும் பிறவும். யாழ்ப்பாணம்: மீளுகை.

குணேஸ்வரன்,சு. (2009). அலைவும் உலைவும். யாழ்ப்பாணம்: தினைப்புனம் வெளியீடு.

சித்திரலேகா மௌனகுரு. (1995). இலங்கைத் தமிழரின் புலம்பெயர் இலக்கியம். நுகேகொட: சுதந்திர இலக்கியவிழா அமைப்புக்குழு.

சேமகரன்,எம். (2004). புலம்பெயர்ந்தோரின் புலம்பெயரா நெஞ்சங்கள். சென்னை: மேகலைப் பிரசுரம்.

திருமலை நவம். (2012). திருகோணமலை கலை இலக்கிய வரலாறு. கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

பொன்னுத்துரை,எஸ். (2006). பனிக்குள் நெருப்பு: புலம்பெயர்ந்தோர் இலக்கியம் ஒரு வரலாற்றுப் பார்வை. சென்னை: மித்ர ஆர்ட்ஸ் அன்ட்க்ரியேஷன்ஸ்.

நாகேந்திரன்,சிசு. (2008). பிறந்த மண்ணும் புகலிடமும்: சில அவதானிப்புகள். அவுஸ்திரேலியா: அவுஸ்திரேலிய தமிழ் இலக்கியக் கலைச்சங்கம்.

நித்தியா,வி. (2002). புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழரின் பண்பாட்டுத் தனித்துவம்: சில அவதானிப்புகள். கொழும்பு: தமிழ்ச்சங்கம்.

யாழினி முனுசாமி. (2007). பின்நவீனத்துவச் சூழலில் புலம்பெயர்ந்தோர் கவிதைகளும் பெண்ணியக் கவிதைகளும். சென்னை: மித்ர ஆர்ட்ஸ் அன்ட்க்ரியேஷன்ஸ்.

விசாகரூபன்,கி. (2004). புலம்பெயர் கவிதை: உருவம் உள்ளடக்கம் உணர்த்துமுறை. யாழ்ப்பாணம்: தேசியக் கல்வியியற் கல்லூரி.

வெற்றிச்செல்வன்,தெ. (2009). ஈழத்தமிழர் புகலிட வாழ்வும் படைப்பும். சென்னை: சோழன் படைப்பகம்.